


# மனித நேயக் கட்சி
# (HUMANIST PARTY)



# மனித நேயக் கட்சி
# (HUMANIST PARTY)

**தோற்றம்:**
- 1984 டிசம்பர் 10, மனித உரிமை தினத்தன்று தேசியக் கட்சியாகப் பதிவு செய்யப்பட்டது.
- 1969 -ல் சிலோ என்பவரால் அர்ச்சன்டீனாவில் மனித நேய இயக்கம் வித்திடப்பட்டது.
- இன்று 110 நாடுகளில் 50 இலட்சம் உறுப்பினர்களையும் ஆர்வலர்களையும் கொண்டுள்ளது.
- மனித நேய இயக்கத்தின் ஒரு அங்கமாக மனித நேயக் கட்சி செயல்படுகிறது.
- உலகளாவிய மனித நேய அரசு அமைக்கும் நோக்கோடு உலகின் பல நாடுகளிலும் தேர்தலில் நிற்கிறது.

**இலக்கு:**
- மனித நேய தமிழகத்தை, இந்தியாவை உருவாக்குவது.
- இவ்வாறு மனித நேய உலகை அமைப்பது.

**கொள்கை:**
- மனித குலம் அனைத்துக்கும் அனைத்தும் கிடைக்க வழி செய்வது.
- இந்தியர் அனைவருக்கும் ஆரோக்கியமான உணவு, உறைவிடம், தரமான கல்வி, மருத்துவம், உரிய வேலை வாய்ப்பு, சுற்றுச் சூழல் இவைகளைப் பெற உரிமையுண்டு. அவ்வுரிமைகளை அரசு அங்கீகரித்து நிறைவேற்றுவதே முதன்மையானது.
- மனித நேயக் கட்சி ஆட்சி பொறுப்பேற்கும் போது மக்கள் அனைவருக்கும் இவைகள் கிடைத்திட வழிவகுக்கும்.

**சித்தாந்தம்:**
- உலகின் உயர்ந்ததும், விலை மதிப்பற்றதும் மனிதமே!
- யாரும் யாருக்கும் உயர்ந்தோருமில்லை, தாழ்ந்தோருமில்லை.
- எல்லா மனிதரும் சமமானவரே.
- மனித உரிமைகளும், மனிதன் வளர்வதற்கான வாய்ப்புகளும் எல்லா மனிதரும் பெற உரிமையுண்டு

**மனிதனைப்பற்றிய கணிப்பு:**
- சுதந்திரம் என்பது மனித வரலாற்றில் முதன்மையானதாக இருந்துள்ளது.
- துன்பங்களிலிருந்தும், நோய்களிலிருந்தும், இயற்கைச் சீற்றத்திலிருந்தும், அடிமைத் தனத்திலிருந்தும் விடுதலை பெறவே மனித குலம் ஏங்கியுள்ளது, போராடியுள்ளது.
- ஆனால் இன்று பெருவாரியான மக்கள் மனித மாண்போடு வாழமுடியாமல் தவிக்கிறார்கள்.

**வரலாற்றுக் கடமை:**
- மனிதன் ஒரு வரலாற்று உயிரி.
- ஒரு சிலரின் முன்னேற்றம் முன்னேற்றமேயல்ல. மனித குலம் முழுவதும் முன்னேறுவதே உண்மையான முன்னேற்றம். எந்த கூட்டு உணர்வில் செயல்படுவது இன்றையக் கடமை.
- மனித மாண்பை பாதிக்கும் அந்த அரசியல், சமுக அமைப்புகளிலிருந்தும், வன்முறைகளிலிருந்தும், வறுமையிலிருந்தும் விடுதலைபெற வேண்டியுள்ளது.

## இன்றைய அநீத நிலை

**பொருளாதாரம்:**
- 2 வீத மிகப்பெரும் பணக்காரர்கள் கையில் உலகின் 50 வீத சொத்துக்கள் உள்ளன. அவர்களது மக்கள்-விரோத பொருளாதார திட்டங்களையே உலகின் பல நாடுகள் பின்பற்ற கட்டாயப்படுத்தப்படுகின்றன.

**அரசியல்:**
- உலகப்பெரும் பணக்காரர்களின் பிடியில் பல நாடுகளின் அரசு உள்ளது. அவர்களைச் சார்ந்து செயல்படுகிறது.

**விளைவு:**
- ஆசிய நாடுகளில் 300 மில்லியன் மக்கள் உணவுக்கே அல்லாடல்.
- நிமிடத்திற்கு 2 குழந்தைகள் பசியால், ஊட்டச் சத்துக் குறைவால், நோயால் மடிகிறார்கள்.
- பல இலட்சம் பேர் வேலை இழக்கிறார்கள், வேலையின்றி தவிக்கிறார்கள்.
- மன அழுத்தம், புற்று நோய், இதய நோய், தற்கொலை முயற்சி அதிகரிக்கிறது.

## மக்களின் கொந்தளிப்பு

- லஞ்சம் - என்ற விஷச் சந்து மக்களைச் சாகடிக்கிறதே!
- ஊழல் - கரையான் எல்லாத் துறைகளையும் அழிக்கிறதே!
- வேண்டியவர் வேண்டாதவர் என்ற பாகுபாடு பரவியுள்ளதே!
- பணக்காரருக்கு ஒரு நீதி, ஏழைக்கொரு நீதி என்ற அதர்மம் நீடிக்கிறதே!
- விலைவாசி சுரம் போல் ஏறிக் கொண்டே போகிறதே!
- குறைந்த ஊதியத்தால், தரமான வாழ்க்கையில்லையே!
- ஆரோக்கியமற்ற உணவு வகைகள், மருந்துகள், போதைப் பொருட்கள் பெருகி வருகிறதே!
- காற்று, தண்ணீர் மாசடைகிறதே!
- சுற்றுச் சூழல் வெப்பமடைகிறதே!
- நீர் நிலம் சீர்கெட்டுப் போகிறதே!
- விவசாயம் அழிந்து போகிறதே!
- அடிதடி, வெட்டுக்குத்து, வன்முறை அன்றாடக் காட்சியாகிறதே!
- மக்கள் பணம் எல்லாவற்றிலும் உறிஞ்சப்படுகிறதே!
- மனித மாண்பு குறைந்து கொண்டே போகிறதே!
- மனித நேயம் மறைந்து கொண்டே போகிறதே!

## அரசியல் பற்றி மக்கள் கணிப்பு

- வாரிசு அரசியல்
- ஜாதி அரசியல்
- சந்தர்ப்பவாத அரசியல்
- பன்னாட்டு தொழில், நிதி நிறுவனங்களுக்கு தரகர்களாக உலக அரசியல் மாறுவது.
- பன்னாட்டு நிறுவனங்களுக்கு நாடு தாரை வார்க்கப்படுவது.
- தன் நாட்டாரை தரமற்றவர்களாக நடத்துவது.
- மிக பல அரசியல்வாதிகள் முடிசூடா மன்னர்களாக, குட்டி பிரபுக்களாக, ஜமீன்தார்களாக மாறுவது.
- தன் கட்சித் தொண்டர்களை ஆண்டான்-அடிமைகளாக நடத்துவது.
- கோடி கோடியான அநீதச் சொத்துக்களுக்கு அதிபதிகளாவது.
- அவர்களைச் சூழ்ந்து வன்முறைக்கும்பல், வன்முறைக் கலாச்சாரம்.
- மலிவான அரசியல் வாக்குறுதிகள்.
- தேர்தலில் ஏழையின் பங்காளியாகவும், தேர்தலுக்குப்பின் முதலாளிகளின் கூட்டாளியாகவும் மாறுவது.
- தேர்தலில் மக்களை மயக்கும் யுக்திகளைக் கையாள்வது.
- கறுப்பு பண நடமாட்டம், அடிதடி, மிரட்டல், கள்ள ஒட்டு.
- இவையனைத்தும் ஜன நாயகத்திற்கு எதிரான, மக்கள் விரோதச் செயல்கள்.

## மனித நேயக் கட்சியின் அணுகுமுறை

- நம்மில் தலைவனென்றோ,தொண்டனென்றோ இல்லை.
- அனைவரும் சமம். அனைவரும் முழு ஈடுபாடு கொள்வர்.
- அனைவரும் தம் ஆற்றலுக்கேற்ப பங்கெடுப்பர்.
- கூட்டு முயற்சி, கூட்டு சக்தி, கூட்டு நிர்வாகம்.
- எண்ணத்திலும், சொல்லிலும், செயலிலும் வன்முறையற்ற நிலைப்பாடு.
- மதிநுட்பம், மனதிடன், மலர்ந்த நன்மைத் தனத்துடன் செயலூக்கமுடைய அறவழியில் எல்லாத் தடைகளையும் தாண்டிச் செல்வது.
- தேர்தலுக்கு முன்பும், தேர்தல் நேரத்திலும், தேர்தலுக்கு பின்பும் தன்னையும் சமூகத்தையும் மனித நேயத்தில் தொடர்ந்து வளர்த்துக் கொள்ளல்.
- பிற கட்சியினரையோ, மாற்றுச் சிந்தனையாளர்களையோ பகைவர்களாகப் பார்க்காமல், மனித நேய ஆற்றல் புதைந்திருக்கும் சக மனிதராகக் காணல், உறவாடல், தோழமை கொள்ளல்.

## வேட்பாளர்கள்

- மனிதநேயச் சிந்தனையும் மனித நேய அணுகுமுறையும் கொண்டோர்.
- நாட்டில் உள்ள ஒவ்வொருவரின் நலனுக்காகத் தாய்மையுணர்வுடன் திட்டமிட்டு செயல்படுவோர்.

## மனிதநேய அரசில் மக்களின் பங்களிப்பு

- திட்டமிடுவதிலும் முடிவெடுப்பதிலும் எல்லா நிலைகளிலும் மக்கள் முழுமையாக ஈடுபடுவது.
- வேட்பாளர்கள் மனித நேயத்திற்கு மாறான முறைகளில் ஈடுபட்டால் அவர்களை நாடாளு மன்றத்திலிருந்து திரும்பப் பெறுவது.
- தேர்வு செய்யப்பட்ட வேட்பாளர் தம் பதவிப் பொறுப்பில் ஒரு முறையே பணியாற்றுவது. அது பலரும் அப்பொறுப்பேற்று செயல்பட வழி வகுக்கும். சொத்து குவிப்பு மன நிலையை, வாரிசு அரசியலை தவிர்க்கும்.
- தேர்தல் பணிகளில் ஈடுபடுவோரில் தகுதியுள்ளோர் பிற தேர்தல்களில் வேட்பாளர்களாகப் பரிந்துரைக்கப்படுவர்.

## தேர்தல் நிதி

- வெளிநாட்டிலிருந்தோ, அநீதமாக பணம் குவித்தோரிடமிருந்தோ நிதி பெறுவதில்லை. அது அநீதிக்கு வழி வகுக்கும்.
- மனித நேயமிக்க மாற்று சமூகத்தை மனித நேயக் கட்சி அமைக்கும் என நம்புவோர் சிறு, நடுத்தர நிதி வழங்கலாம்.
- மனித நேயக் கட்சியின் பத்திரிக்கை, துண்டு பிரசுரங்களுக்கு சிறு நன்கொடை தரலாம்.
- தேர்தலில் மனித நேயக் கட்சிக்கு வாக்களிக்கும் ஏழையின் ஒரு ரூபாய் முதற்கொண்டு பெரும் நிதியாகக் கருதப்படும்.
- தேர்தல் நிதி தேர்தலுக்கு மட்டும் செலவிடப்பட்டு கணக்கு முடிக்கப்படும்.
- வேட்பாளர் பெரும் தொகையை முதலீடாகப் போட்டு மிகப் பெருந்தொகையை அறுவடை செய்யும் போக்கு முழுவதும் இருக்காது.
- கட்சிப்பணியாளர்கள் “சோறு, பீர், நூறு”-என்று பிறகட்சியினரைப் போல் வேட்பாளரிடம் எதிர்பார்ப்பதில்லை. மாறாக, உண்மையான மனித நேய ஆற்றலையே பரிமாறிக் கொள்வர்.

## தேர்தல் களம்

- உலகளாவிய பெரும் பணக்காரர்களின் சூதாட்டகளம்.
- அரசியல்வாதிகள் தரகர்களாக விலை பேசப்படல்.
- மக்களின் வாக்குகள் சொற்ப விலை கொடுத்து வாங்கப்படும் பண்டமாதல்.
- இதனடிப்படையில் மக்கள்-நல அரசு அமையுமா?

- மனித நேயக் கட்சி உண்மையான மக்களாட்சியை விரும்புகிறது.
- பணத்தையல்ல, மக்களின் சிந்தனைத் தெளிவை மதிக்கிறது.
- மக்களின் வாக்கு மாற்று சமூகத்திற்கான பங்களிப்பாகக் கருதுகிறது.
- தேர்தல் களம் மக்களின் விழிப்புணர்வு பலம்.

## வாக்களர்கள்

- நல்லதைத் தேர்வு செய்து உண்பது, உடுத்துவது, உறவாடுவது மனித மாண்பின் வெளிப்பாடு.
- தேர்தலிலும் யாரை, எந்தக் கட்சியைத் தேர்வு செய்வது-மனித மாண்புடையோரின் மிகப் பெரிய பொறுப்பாகும்.
- தனித்தும் கூட்டாகவும் சிந்தித்து வேட்பாளரைத் தேர்வு செய்வர்.
- மனித நேயக் கட்சி ஆர்வலர்களும் உறுப்பினர்களும் ஒருவர் பதினைந்து பேருடன் இக்கருத்துக்களை பரிமாறிக் கொண்டால் நாம் மனித நேய ஆட்சி அமைப்பது உறுதி. அப்பொறுப்பு நம்மைச் சார்ந்தது.

## பிற கட்சிகளிலிருந்து வேறுபட்டது

- மனித மாண்பையும் நேயத்தையும் முதன்மையானதாகவும் உயர்வானதாகவும் போற்றுவது.
- மனித நேயத்தில் தன்னைத் தொடர்ந்து வளர்த்துக் கொள்வது. அதே சமயம் சமூகத்தை மனித நேயத்திற்குரியதாக மாற்றியமைப்பது. இதைத் தொடர் பணியாக மனித நேயக்கட்சி வலியுறுத்துகிறது.

## மனித நேயக் கட்சியினரின் மைய மனநிலை

- எந்தச் சூழலிலும் நல்லதை, நிறைகளை, நம்பிக்கைக்குரியதை நினைப்பது.. பேசுவது.
- மனித நேயமற்ற நிலையிலிருந்து மனித நேயமிக்க நிலைக்கு அனைத்தையும் மாற்ற முடியுமென நம்பி செயல்படுவது.
- எந்த வயதாயினும் மனதில் துடிதுடிப்புடன் இயங்குவது.
- மனித நேயச் சிந்தனை, செயல்பாட்டில் உலகளாவிய கூட்டு சக்தியுடன் முன்னேறுவதாக உணர்வது.
- இந்த உண்மையான அர்ப்பணத்தில் மனதை மகிழ்ச்சியால் நிரப்புவது.
- யாரையும் எதையும் சார்ந்து, யாருக்கும் பயந்து தம் ஒரே பொக்கிசமான “மனிதத்தை” சிதைக்க விடுவதில்லை. மாறாக, தன் தனித்துவத்தோடு முழு ஈடுபாடு கொள்வது.
- கூட்டு சக்தி, கூட்டு முயற்சியில் நம்பிக்கை கொள்வது.

## மனித நேயக் கட்சி ஆட்சி பொறுப்பில்

- முழுமையாக ஊழலற்ற, வன்முறையற்ற, ஸ்விட்சர்லாந்துக்கு இணையான, வளமான, வனப்பான, மனித நேயமிக்க இந்தியாவை உருவாக்குவோம்.
- எல்லோருக்கும் அடிப்படைத் தேவைகளான மனித மாண்பிற்குரிய உணவு, வீட்டு வசதி, வேலை வாய்ப்பு, கல்வி, மருத்துவம், சுகாதாரமான வாழ்க்கைச் சூழல் அமைப்போம்.
- பிறந்த குழந்தையிலிருந்து முதியவர் வரை அனைவரையும் தாயைப்போல் பேணிக்காக்கும் அரசு அமைப்போம். அரசு திட்டங்கள் அமையும்.
- அண்டை நாடுகளோடும், உலகளாவிய அளவிலும் மனித நேய அரசு அமைய ஆவண செய்வோம்.

## மனித நேயக் கட்சியின் சின்னம்

- ஒரு ரிபனின் இரண்டு முனைகளை இணைத்து இரு புறமாகத் திருகினால் இரு பக்கங்களும் முப்பரிணாமங்களும் கொண்டு அமையும்.
- இதை மோபியஸ் ரிபன் என்பர்.
- மனிதத்தைப் பற்றிய புரிதலுக்கு மிக அருகாமையில் உள்ளதாக இந்த அடையாளம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.
- மனிதரின் அளப்பறிய ஆற்றல், மாற்றத்திற்கு வழி வகுக்கக் கூடிய எதிர்கால கனவைச் சுமந்துள்ளது.
- நீடித்து நிலைத்தலின் அடையாளம் இது.
- உள்ளும் புறமும், தனி மனிதமும் சமூகமும் தனிமனித முன்னேற்றமும் சமூக முன்னேற்றமும் என்ற இரட்டை முனைகள் இணைந்த வாழ்க்கை முறை.
- தருவதும் பெறுவதும் என்ற எதிர் முனைகள் இணைந்த வாழ்வு முறையைத் தாங்கியது.

## நமது வேட்பாளர்

- மத்திய சென்னை நாடாளுமன்றத் தொகுதிக்கு



நண்பர் **எஸ். சந்தனம்** அவர்கள்,
B.A. - உளவியல் (Psychology),
M.A.அரசியல் (Political Science)
சர்வதேச மனித நேய இயக்க
தமிழக ஒருங்கிணைப்பாளர்.

பி.கு: மனித நேய ஆர்வலர்கள் தமிழகத்தின் பிற தொகுதிகளில் வேட்பாளராக நிற்க விரும்பினால்

**தொடர் கொள்க:**

humunistpartytamilnadu@yahoo.co.in
http://www.humanistparty.org